# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே


செவ்வாய்க்கிழமை 17.08.2021 supeedsam.com supeedsam@gmail.com







# "அமைச்சை பறிப்பார்கள் என்று நினைக்கவில்லை"
## மன்னர் - புரோகிதர் கதை ஒன்றை ஊழியர்களிடம் பகிர்ந்து விட்டு கவலையுடன் வெளியேறிய பவித்ரா



(ராஜ்)

சுகாதாரத் துறை அமைச்சு பறிபோகும் என தான் நினைக்கவில்லை என தெரிவித்துள்ள முன்னாள் சுகாதாரத் துறை அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி,எதிர்பாராத நேரத்தில் தனது அமைச்சு மாற்றப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

கொவிட் வைரஸ் பரவல் நெருக்கடி நிலைமைகளுக்கு மத்தியில் தான் பல முன்னேற்றகரமான வேலைத்

02 ஆம் பக்கத்தில்...

## மட்டக்களப்பில்
## அனுமதி மறுக்கப்பட்டும் ஞானஸ்தானம் நடத்திய தரப்பில் 4 பேருக்கு கோரோனா

### வணபிதா உட்பட 9 பேர் தனிமைப்படுத்தல்

(மட்டு சுபீட்சம் நிருபர்)

மட்டக்களப்பு நகரிலுள்ள சென் செபஸ்தியான் தேவாலயத்தில் பெண் ஒருவருக்கு ஞானஸ்தானம் செய்வதற்கு சுகாதார துறையினர் அனுமதி வழங்காத நிலையில் அதனை மீறி நடத்திய நிலையில் மன்னாரில் இருந்து அதில் பங்கேற்ற 4 பேருக்கு கொரோனா

02 ஆம் பக்கத்தில்...

## பொத்துவிலில் சுற்றுலா பொலிஸார் 11 பேருக்கு கொரோனா
### பல திணைக்களங்கள் பூட்டப்பட்டன



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

தற்போது நாட்டின் பல பிரதேசங்களிலும் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளன. அம்பாறை மாவட்டத்திலும் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை

02 ஆம் பக்கத்தில்...


## முழுநேர ஊரடங்குச் சட்டம்!
### ஆராய்கிறது அரசாங்கம்

(காந்தன்)

நாடு முழுவதிலும் வார இறுதி நாட்களான சனி மற்றும் ஞாயிறுக் கிழமைகளில் முழுநேர தனிமைப்படுத்தல் ஊரடங்கை அமுல்படுத்த அரசாங்கம் ஆலோசனை நடத்திவருவதாக தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

02 ஆம் பக்கத்தில்...

## அமைச்சரவையில் மாற்றம் 6 அமைச்சுகளில் கைமாறின



(காந்தன்)

இலங்கை அமைச்சரவையில் நேற்று காலை மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி ஜனாதிபதி கோட்டாபய முன்னிலையில் 6 புதிய அமைச்சர்கள் பதவியேற்றுள்ளனர்.

அதனடிப்படையில்,ஜி.எல்.பீரிஸ் வெளிவிவகார

02 ஆம் பக்கத்தில்...

## விடுதலைப் புலிகளுக்கும் எங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை
### தலிபான்கள் அறிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் எந்த தொடர்பும் இல்லை என தலிபான்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஆங்கில ஊடகமொன்றுக்கு வழங்கிய பிரத்தியேக செவ்வியிலேயே தலிபான் செய்தித்

02 ஆம் பக்கத்தில்...

## தலிபான்களின் முன்னேற்றம் ஆபத்தானது
### இலங்கை முஸ்லிம்கள் அவதானமாக இருக்க வேண்டும்



(ஏ.பி.எம்.அஸ்ஹர்)

ஆப்கானிஸ்தானில் தாலிபான்களுடைய வெற்றி ஆபத்தானது. எனவே இலங்கை முஸ்லிம்கள் அவதானமாக இருக்க வேண்டும் என கிழக்கு மாகாண முன்னாள் உறுப்பினருமான ஏ.எல்.தவம் தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...






## வடமராட்சியில் இராணுவ முகாமிற்கென காணி சுவீகரிப்பு
### முயற்சி அரசியல் பிரமுகர்களால் தடுத்து நிறுத்தப்பட்டது

(வடமராட்சிநிருபர்)

வடமராட்சியில் கற்கோவளம் இராணுவ முகாமிற்கென நான்கு ஏக்கர் தனியார் காணியினை சுவீகரிப்பதற்க்கான நடவடிக்கைகள் நேற்று திங்கட்கிழமை (16) காலை 9.30 மணிக்கு இடம் பெறவிருந்த வேளை அங்கு சென்ற அரசியல் பிரமுகர்களால்

02 ஆம் பக்கத்தில்...

## பிரித்தானியாவில் 2011 ம் ஆண்டு சுடப்பட்ட ஈழத்தமிழ் சிறுமி
### நிலை நாட்டியுள்ள சாதனை



லண்டனில் 10 வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற, துப்பாக்கி சூட்டு சம்பவம் ஒன்று, இன்னும் பல தமிழர்கள் மத்தியில் நீங்காமல் நினைவில் இருக்கிறது.துஷா கமலேஸ்வரன் என்ற 5 வயது சிறுமி தனது மாமாவின் கடையில் துள்ளி விளையாடிக் கொண்டு இருந்த வேளை,ஒரு குழுவுக்கு இடையே நடந்த மோதல்.

அந்தக் குழுவில் இருந்த நபர் சுட்ட குண்டு ஒன்று அவரது முள்ளம்

02 ஆம் பக்கத்தில்...









## அமைச்சு பதவிகளை பெறப்போவதில்லை
## சமூக பிரச்சினைகளுக்கான தீர்வே அவசியம்: ஹரீஸ்



(மாளிகைக்காடு நிருபர்)

அமைச்சு பதவிகளையோ அல்லது இராஜாங்க அமைச்சுக்களையோ 20க்கு ஆதரவளித்த மு.கா உறுப்பினர்களாகிய நாங்கள் நிபந்தனையாக முன்வைக்கவில்லை 20தை ஆதரிக்க சமூகம் சார்ந்த பிரச்சினைகளையே அரசாங்கத்துடன் பேசினோம்.

முஸ்லிங்களுக்கு பாதகமாக அமைய இருந்த தனியார் சிவில் சட்ட திருத்தம் தொடர்பில் பேசி தீர்வை முன்வைத்தே

02 ஆம் பக்கத்தில்...










## முழுநேர ஊரடங்குச்

இது தொடர்பில் தென்னிலங்கை ஊடகமொன்று வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுகுறித்த பேச்சுவார்த்தையை அரசாங்கத் தரப்பு நடத்திவருவதாகவும் கூறப்படுகின்றது.

எவ்வாறாயினும் இன்று முதல் இரவு 10 மணி முதல் அதிகாலை 4 மணிவரை நாடு முழுவதிலும் இராநேர தனிமைப்படுத்தல் ஊரடங்கு அமுலாகின்றமை குறிப்பிடத்தக்கது.




## வடமராட்சியில் இராணுவ முகாமிற்கென காணி சுவீகரிப்பு

அந் நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினருமான எம். கே. சிவாஜிலிங்கம், தமிழ் தேசிய மக்கள் முன்னணி சட்ட ஆலோசகர் ந.காண்டீபன், பருத்தித்துறை பிரதேச சபை உறுப்பினர்கள், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்கள் உட்பட்ட சிலர் நில அளவை மேற்கொள்ள வந்த நில அளவையாளர்கள் மற்றும் அதிகாரிகளை நில அளவை மேற்கொள்ள செல்லவிடாது வீதிக்கு குறுக்கே இருந்து தடுத்து நிறுத்தினர்.

இப் போராட்டம் சுமார் ஒருமணி நேரம் நீடித்த நிலையில் குறித்த காணியை இராணுவத்திற்க்கு வழங்க மாட்டோம் என பொது மக்கள் சார்பில் யாராவது தெரிவித்தால் தாம் திரும்பி செல்வதாக நில அளவை திணைக்கள அதிகாரி தெரிவித்ததற்க்கு அமைவாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினருமான எம். கே. சிவாஜிலிங்கம் கடிதம் எழுதி நில அளவை மேற்கொள்ள வந்த அதிகாரிகளிடம் கொடுத்தார்.

இதனை தொடர்ந்து நில அளவை திணைக்கள அதிகாரிகள் திரும்பி சென்ற நிலையில் குறித்த போராட்டம் முடிவுற்றது.

இதன் போது பொலீசார் ஆயதங்களுடனும் சிவில் உடையிலும் குவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பிரித்தானியாவில் 2011 ம் ஆண்டு

தண்டை பதம் பார்க்க. அவர் உயிருக்கு போராடி, இறுதியில் காப்பாற்றப்பட்டார். ஆனால் அவரால் எழுந்து நடக்க முடியவில்லை. இருப்பினும் கடுமையாக உடல் பயிற்ச்சிகள் செய்து மெல்ல மெல்ல முன்னேறி வருகிறார்.

இம் முறை இடம்பெற்ற O/L பரீட்சையில் துஷா பெரும் சாதனை படைத்துள்ளார் என்று ஆங்கிலப் பத்திரிகைகள் அவரைப் பாராட்டி உள்ளது.

இந்த ஈழத் தமிழச்சியால் முழு பிரித்தானியாவும்,ஒரு முறை தமிழர்களை திரும்பிப் பார்த்துள்ளது என்று தான் கூறவேண்டும்.9 பாடங்களில் அனைத்திற்கு 8 க்கு மேல் மதிப்பெண்களை அவர் எடுத்துள்ளார்.

## அமைச்சு பதவிகளை பெறப்போவதில்லை

20க்கு ஆதரவளித்தோமே தவிர அமைச்சு பதவிகளையோ அல்லது இராஜாங்க அமைச்சுக்களையோ நாங்கள் நிபந்தனையாக முன் வைக்கவில்லை. 20க்கு ஆதரவளித்த மு.கா உறுப்பினர்கள் யாரும் அமைச்சுக்களை பெறப்போவதில்லை.

பொறுப்பு வாய்ந்த மக்கள் பிரதிநிதிகளாக சமூகத்தின் பிரச்சினைகளை தீர்க்கவே முன்வந்துள்ளோம். அனர்த்த அரசியல் சூழ்நிலை எழுந்துள்ள இந்த காலகட்டத்தில் சர்வதேச விடயமாக நடந்து முடிந்த சஹ்ரானின் செயலினால் கூட முஸ்லிம் சமூகம் மிகப்பெரும் நெருக்கடியை சந்தித்து வருகிறது. சமூகத்திற்கு சவாலொன்று வரும் போது கோழைகளாக ஓடியொழிய முடியாது. ஜனாதிபதியே அல்லது யாருடைய கதவையாவது தட்டி தீர்வை பெறுவதே எங்கள் எண்ணம் அதுவே எங்களின் தலைவர்களின் வழிகாட்டல் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் பிரதித்தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.

தனியார் ஊடகமொன்றின் அரசியல் நிகழ்ச்சியொன்றில் திங்கட்கிழமை கலந்துகொண்டு பேசிய அவர் அங்கு கருத்து தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். கருத்து வெளியிடுகையில் ராஜபக்ஸ அரசாங்கத்தின் மஹிந்த, கோத்தா போன்ற தலைவர்கள் இடதுசாரி கொள்கையை உடையவர்கள். இவர்களில் சிறுபான்மையினரின் பிரச்சினைகளை அறிந்த ஒருவராக நிதியமைச்சர் பசில் ராஜபக்ஸ இருக்கிறார். அதனாலேயே அது தொடர்பில் நாங்கள் அந்த முடிவை எடுத்தோம். 20 ம் திருத்தம் என்பது புதிய விடயமல்ல. 19 இல் விளக்கப்பட்டவை 20 இல் பலப்படுத்தப்பட்டுள்ளது. இது பசிலுக்கான சட்டமூலமில்லை. யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த எத்தனையோ இலங்கையர்கள் வெளிநாட்டில் இரட்டை பிரஜாவுரிமை பெற்றுள்ளார்கள். அவர்களும் இலங்கை அரசியலில் ஈடுபட சாதகமாக இந்த சட்டமூலம் அமையும். சாதிக்கும் திறமை கொண்ட ஆளுமையானவர்கள் யாராக இருந்தாலும் இலங்கை அரசியலில் இருக்க வேண்டும்.

நாட்டின் சுற்றுலாத்துறை பாதிப்படைந்து, வரிகள் தடுமாற்றத்தை சந்தித்து இலங்கை நாணயம் வீழ்ச்சியை நோக்கி சென்ற போது புதிய நிதியமைச்சராக பசில் ராஜபக்ச அமைச்சை பொறுப்பேற்றார். நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப பல்வேறு நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டுவருகிறார். முரண்பட்டிருந்த பல நாடுகளுடனும் நல்லிணக்கத்தை உண்டாக்கி பல்வேறு அமைப்புக்களுடனும் உறவை வளர்த்து அந்நிய செலவாணியை நாட்டுக்கு கொண்டுவர முயற்சிக்கிறார். இதில் ஒழித்துமறைத்து பேச இங்கு எதுவுமில்லை. அவர் அரசியல் அரங்குக்கு வந்த பின்னர் பசிலுடன் பேச தமிழ் மக்களின் தரப்பும் தயாராக இருப்பதாக கூட்டமைப்பின் முக்கியஸ்தர் சுமந்திரன் அறிவித்துள்ளார். தமிழ், முஸ்லிம் மக்கள் சில விடயங்களில் புறக்கணிக்கப்படுகிறோம் என்பதை ஏற்றுக்கொள்கிறோம். இலங்கை அரசியலை புரிந்துகொண்டு நடப்பதே இப்போதைய அரசியல் சூழ்நிலைக்கு நல்லது என்றார்.

## விடுதலைப் புலிகளுக்கும் எங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை

தொடர்பாளரும் சர்வதேசப் பேச்சுவார்த்தையாளருமான சுஹைல் ஷாஹீன் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தங்களுக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்றும் தாங்கள் ஒரு சுதந்திரமான விடுதலைப் படையென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இது கடந்த 20 ஆண்டுகளாக தமது நாட்டின் ஆப்கானிஸ்தானின் விடுதலைக்காக வெளிநாட்டு ஆக்கிரமிப்புக்கு எதிராக போராடியது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தானின் பாமியன் பள்ளத்தாக்கில் அமைந்துள்ள உலகின் மிக உயரமான புத்தர் சிலை, தலிபான்களால் மார்ச் 2001ஆம் ஆண்டு அழிக்கப்பட்டது. பழங்கால மணற்கல் சிற்பங்களை அழித்ததை கண்டித்த நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். இந்த நிலையில், தாலிபான்கள் மீண்டும் ஆட்சிக்கு வருவது பௌத்த தளங்களுக்கு அச்சுறுத்தலாக அமையும் என்ற அச்சம் தற்போது உள்ளதாக குறித்த ஆங்கில ஊடகம் செய்தியில் சுட்டிக்காட்டியுள்ளது.

எவ்வாறிருப்பினும் தலிபான் தலைமையிலான நிர்வாகத்தின் கீழ் ஆப்கானிஸ்தானில் உள்ள பௌத்த தளங்கள் ஆபத்தில் இருக்காது என்று ஷாஹீன் வலியுறுத்தினார் என அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தலிபான்களை பயங்கரவாதிகளாக இலங்கை கருதக்கூடாது என அவர் கூறியதாகவும் தங்கள் நாட்டின் விடுதலைக்காகப் போராடிய இலங்கையின் முன்னோர்களைப் போல தாங்கள் ஆப்கானிஸ்தானின் சுதந்திரப் போராளிகள் என அவர் தெரிவித்ததாகவும் கூறப்பட்டுள்ளது.

அமெரிக்கப் படைகள் வாபஸ் பெற்றதைத் தொடர்ந்து ஒரு வாரத்தில் தலிபான்கள் ஆப்கானிஸ்தான் முழுவதையும் கைப்பற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தலிபான்களின் முன்னேற்றம் ஆபத்தானது

அவர் விடுத்துள்ள குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

20 வருடங்களுக்கு பின்னர் மீண்டும் தாம் ஆப்கானிஸ்தானை முழுமையாக கைப்பற்றி யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வந்துவிட்டதாக தாலிபான்கள் அறிவித்துள்ளனர்.

இது ஒரு நல்ல சமிக்ஞையாக பார்க்க முடியவில்லை. அபசகுணமாகவே தோன்றுகிறது. உலக அதிகார சமநிலையில் மேற்கத்திய விளையாட்டின் ஒரு பகுதியாக இதனை பார்க்க முடிகிறது.

இப்படித்தான் அல்கைதா இயக்கத்தை உருவாக்கினார்கள். இப்படித்தான் அரபு வசந்தத்தை ஒரு கட்டத்திற்குப் பின்னர் பயன்படுத்தினர். இப்படித்தான் ஐஎஸ்ஐஎஸ் யை பலப்படுத்தினர். இப்போது தாலிபான்களை திறந்துவிட்டுள்ளனர்.

விசேடமாக சீனா, தஜிக்கிஸ்தான், உஸ்பெகிஸ்தான், துர்க்மனிஸ்தான், ஈரான் மற்றும் பாகிஸ்தான் போன்ற அனு சக்தி நாடுகளை எல்லையாகக் கொண்ட ஆப்கானிஸ்தானை சாதாரணமாக தலிபான்களிடம் விட்டுக்கொடுப்பது என்பதை நேர்மையான நோக்கத்தோடு பார்க்க முடியாது.

குறிப்பாக தலிபான்களுடைய கையோங்குவது அந்த பிராந்தியத்தில் நேரடியாக தனது தேசிய பாதுகாப்பு மற்றும் உள்நாட்டு ஸ்திரத்தன்மையை பாதிக்கின்ற விடயமாக அமையும் என்பதில் இந்தியா மிகவிழிப்பாக இருக்கும். சீனா மற்றும் பாகிஸ்தானின் தூண்டுதல் இதற்கு உந்துதலாக அமையும் என்பதையும் இந்தியா கணிக்கத் தவறாது.

இதன் விளைவு இலங்கை முஸ்லிம்களிலும் எதிரொலிக்கலாம். இந்திய இஸ்ரேலிய நெருக்கம்; இதற்கு பங்களிப்பு செய்யலாம். ஈஸ்டர் குண்டு வெடிப்பினைப் போன்ற நிகழ்வுகள் இங்கும் அரங்கேறலாம். அதற்கு சஹ்ரானை போன்ற சில முட்டாள்களை முஸ்லிம் சமூகத்திலிருந்து பயன்படுத்தவும் செய்யலாம். ஏலவே, 2001களில் பௌத்த சின்னங்களை தலிபான்கள் உடைந்தெறிந்த அதனை சாதனையாக ஊடகங்களில் காட்டி இலங்கையிலும் பௌதர்களின் உணர்வுகள் தூண்டப்பட்ட அனுபவமும் நமக்குண்டு. இவற்றை விரிவாக வெளிப்படையாக எழுதவும் முடியவில்லை.

எனவே, தாலிபன்களின் வெற்றி நமக்கு ஆபத்தானதாக அமைய சந்தர்ப்பங்கள் நிறையவே உண்டு. அதனால், இலங்கை முஸ்லிம்கள் மிகுந்த விழிப்புணர்வோடு இருக்க வேண்டும். எதிர்வினைகளை இப்போதிருந்தே எதிர்கொள்ள தயாராக வேண்டும்.

## பொத்துவிலில் சுற்றுலா பொலிஸார் 11 பேருக்கு கொரோனா

வெகுவாக அதிகரித்து வருகின்றன.

இந்நிலையில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்திற்கு உட்பட்ட பொத்துவில் பிரதேசத்தில் கொரோனா தொற்றாளர்களை அடையாளம் காண்பதற்கான பி.சி.ஆர். பரிசோதனை மற்றும் அன்ரிஜன் பரிசோதனைகள் என்பன தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.யூ.அப்துல் சமது அவர்களின் வழிகாட்டலில் பொதுச்சுகாதார சிரேஸ்ட மேற்பார்வை உத்தியோகத்தர் எம்.எஸ்.எம். அப்துல் மலீக் தலைமையிலான பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட குழுவினர் தொடர்ந்தும் இந்த நடவடிக்கைகளை பொத்துவில் பிரதேசத்தில் முன்னெடுத்து வருகின்றனர்.

பொத்துவில் அறுகம்பை சுற்றுலா பொலிஸ் பிரிவில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளின் போது, சுற்றுலா துறைக்கு பொறுப்பாக செயல்பட்டு வருகின்ற 11 பேருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. தற்போது இவர்கள் புனானை தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். நேற்று மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனைகளின் போது

பொத்துவில் விவசாய விஸ்தரிப்பு காரியாலயத்தில் ஒரு நபருக்கு கொரோனா தொற்று அடையாளம் காணப்பட்டதை அடுத்து குறித்த காரியாலயம் மறு அறிவித்தல் வரும் வரைக்கும் மூடப்பட்டுள்ளது. கால்நடை வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இரண்டு நபர்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதனை அடுத்து இந்த அலுவலகமும் தற்போது மூடப்பட்டுள்ளது. செலான் வங்கியின் நபர் ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து வங்கி நடவடிக்கைகளும் முற்றாக முடக்கப்பட்டுள்ளன.

இதேவேளை பொத்துவில் மீன்பிடி யாளர்கள் 100 பேருக்கு (15) பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளன. அறுகம்பை சிங்கபுர பிரதேசத்தில் 93 நபர்களுக்கு எழுமாறாக மேற்கொள்ளப்பட்ட அன்ரிஜன் பரிசோதனையில் 0% நபர்களுக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

தொடர்ந்தும் குறித்த பிரதேசத்தில் பொது மக்களுக்கு தேவையான விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், பொது மக்கள் ஒன்று கூடும் இடங்களில் பி.சி.ஆர். மற்றும் அன்ரிஜன் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

## “அமைச்சை பறிப்பார்கள் என்று நினைக்கவில்லை”

திட்டங்களை முன்னெடுத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் திடீர் அமைச்சரவை மாற்றங்கள் செய்யப்பட்டுள்ள நிலையில், இதுவரை காலமாக சுகாதாரத்துறை அமைச்சராக கடமையாற்றிய பவித்ரா வன்னியாராச்சியை, தற்போது போக்குவரத்து துறை அமைச்சராக நியமித்துள்ளனர்.

இந்நிலையில் இன்று சுகாதார அமைச்சிற்கு சென்ற வேளையில் அவர் தனது கடமையான அதிருப்தியை ஊழியர்களிடம் வெளிப்படுத்தியுள்ளார்.

அமைச்சில் இருந்து விடை பெறுப் செல்கையில் மன்னர் புரோகிதர் கதை ஒன்றையும் தனது ஊழியர்களிடம் பகிர்ந்து கொண்டுள்ளார்.

அவர் கூறுகையில் ” வாழ்க்கையில் அனைத்தையும் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். இப்படி தான் மன்னரும் புரோகிதரும் வேட்டைக்கு சென்று கொண்டிருந்த நேரத்தில் வேட்டையாடும் போது மன்னரின் இலக்கு தவறியதால், என்ன இப்படி ஆகிவிட்டதே என மன்னர் கேட்டபோதும் எல்லாம் நன்மைக்கே என புரோகிதர் கூறினாராம்.

இன்னும் சிறிது நேரம் பயணிக்கும் போது மன்னரின் வாளினால் மன்னரின் ஒரு விரல் வெட்டுப்பட்டுவிட்டதாம்.ஏன் இவ்வாறு நடக்கின்றது என மன்னர் கேட்டாராம். அதற்கும் பதில் கூறிய புரோகிதர் எல்லாம் நன்மைக்கே என்றாராம்.

உடனே மன்னருக்கு கோவம் வந்து, புரோகிதரை குழியொன்றில் போட்டுவிட்டு வேறு திசையில் பயணித்தாராம். அப்போது அரக்கர் கூட்டத்திடம் மன்னர் சிக்கிக் கொண்டாராம். அவரை நரபலி கொடுக்க அரக்கர்கள் தயாராகிய வேளையில் மன்னரின் ஒரு விரல் துண்டு வெட்டப்பட்டதை அரக்கர்கள் பார்த்தார்களாம்.

எனவே முழுமையான மனிதனையே நரபலி கொடுக்க வேண்டும், இவர் நரபலிக்கு கொடுக்க ஏற்றவர் அல்ல என கூறி அரக்கர்கள் அவரை விட்டுவிட்டார்களாம். அப்போதுதான் புரோகிதர் கூறியதும் உண்மையென மன்னர் நினைத்துக் கொண்டாராம்.

உடனே புரோகிதர் இருக்கும் இடத்தை தேடி சென்று மன்னர் புரோகிதருக்கு நன்றி கூறினாராம்.அப்போது புரோகிதர் மன்னரை பார்த்து, மன்னரே என்னை குழியில் விழ வைத்த நானே உங்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். ஒருவேளை நான் உங்களுடன் வந்திருந்தால் உங்களை விட்டுவிட்டு என்னை பலி கொடுத்திருப்பார்கள் என புரோகிதர் மன்னரை பார்த்துக் கூறினாராம். ஆகவே எனக்கு நடந்த விடயங்களும் நன்மைக்கே என நினைத்துக் கொள்வோம்” என கூறியுள்ளார்.

”எதிர்பாராத தருணத்தில் போக்குவரத்து அமைச்சு தன்னிடம் ஒப்படைக்கப்பட்டதாக கூறியுள்ள அவர், ஜனாதிபதி செயலகத்திற்கு செல்லும் வரை இது குறித்து தமக்கு உண்மையில் தெரியாது எனவும் குறிப்பிட்டுள்ளார்.




## அமைச்சரவையில் மாற்றம் 6

அமைச்சர், தினேஸ் குணவர்த்தன கல்வி அமைச்சர்,காமினி லொக்குகே சக்திவள அமைச்சர்,டளஸ் அளகப்பெரும ஊடக அமைச்சர், பவித்திரா வன்னியாராச்சி போக்குவரத்து அமைச்சர்,ஹெகலிய ரம்புக்வெல சுகாதார அமைச்சர் என புதிய அமைச்சர்கள் நியமிக்கப்பட்டு பதவிப்பிரமாணம் செய்துள்ளனர்.

## அனுமதி மறுக்கப்பட்டும் ஞானஸ்தானம்

தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து அதனை நடத்திய தேவாலய வணபிதா ஒருவர் உட்பட 9 பேர் 14 நாட்களுக்கு தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக கோட்டமுனை பொது சுகாதார பரிசோதகர் தெரிவித்தார்.

இந்த தேவாலயத்தில் நகர்பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு ஞானஸ்தானம் செய்வதற்காக பொது சுகாதார பரிசோதகர்களிடம் பெண்ணின் பெற்றோர் அனுமதி கோரிய போது தற்போதைய சுகாதார அறிவித்தல் காரணமாக எந்த நிகழ்வும் செய்யமுடியாது எனவே அந்த நிகழ்வுக்கு அனுமதி வழங்க முடியாது என தெரிவித்து அனுமதி வழங்கப்படாத நிலையில்,அதனை மீறி ஞாயிற்றுக்கிழமை குறித்த தேவாலயத்தில் உறவினர்கள் பலருடன் இந்த ஞானஸ்தான நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

இந்த நிலையில் இந்த ஞானஸ்தான நிகழ்வில் பங்கேற்பதற்கு மன்னாரில் இருந்து அவர்களது உறவினர்கள் கடந்த வாரம் வந்து தங்கியிருந்து ஞானஸ்தான நிகழ்வில் பங்கேற்றுவிட்டு அவர்கள் மீண்டும் தமது சொந்த இடமான மன்னாருக்கு செல்வதற்கான போக்குவரத்து அனுமதி பெறுவதற்காக நேற்று திங்கட்கிழமை பொது சுகாதார பரிசோதகர்களிடம் சென்ற நிலையில் அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் அவர்கள் 4 பேருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனையடுத்து தொற்று உறுதி செய்யப்பட்ட இவர்கள் கரடியனாறு வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் இந்த ஞானஸ்தான நிகழ்வை வணபிதா உட்பட மீறி நடத்திய தேவாலய வணபிதா உட்பட ஞானஸ்தானத்தில் பங்கேற்ற 9 பேர் 14 நாட்களுக்கு தனிமைப்படுத்தப்பட்டுள்ளதாக கோட்டமுனை பொது சுகாதார பரிசோதகர் மேலும் தெரிவித்தார்.

# காத்தான்குடியில் மறு அறிவித்தல் வரை பள்ளிவாயல்கள் மூடப்படவேண்டும்

## கொவிட்19 தடுப்புச் செயலணி தீர்மானம்

(ந.குகதர்சன்)

தற்போது நமது ஊரின் கொரோனா நிலமை தொடர்பிலும் நாட்டில் வேகமாகப் பரவிவரும் 'டெல்டா'திரிபு தொடர்பிலும் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம்பெற்ற முக்கிய அவசரக் கூட்டத்தில் சில தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மாவட்டக்களப்பு மாவட்டத்தில் கெரோனா பரவல் நிலைமை மிகத்தீவிரமாக காணப்படுவதாலும் நமது ஊரில் தற்போது நிலமை நாளுக்கு நாள் மோசமாகி வருவதாலும் மரண வீதங்கள் அதிகரிப்பதாலும் மேற்படி தீர்மானங்கள் அவசியம் கடைப்பிடிப்பதோடு பொது மக்கள் அவதானத்துடனும் சமூகப்பொறுப்புடனும் நடந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

1. இன்று முதல் அமுல்படுத்தப்பட இருக்கும் இரவு 10 மணி தொடக்கம் 4 மணிவரையான ஊரடங்கு சட்ட நேரத்தில் பார்மசி உட்பட அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்படல் வேண்டும்.

2. திருமணம், வலீமா போன்ற சகல நிகழ்வுகளும் மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்தப்படல் வேண்டும்.

3. தேசிய, மாவட்ட கெரோனா தடுப்பு செயலணியின் தீர்மானங்களுக்கு அமைவாக இன்றுமுதல் பள்ளிவாயல்களுக்கு தொழுகைக்காக பொது மக்கள் வருவது இடைநிறுத்தப்பட்டுள்ளதுடன், மறு அறிவித்தல் வரை பள்ளிவாயல்கள் மூடப்படவேண்டும்.

4. இன்று முதல் உணவகங்களில் 'Ta-ke Awa-y' மாத்திரம் அனுமதிக்கப்படுவதுடன் எக்காரணம் கொண்டும் எவரும் உள்ளிருந்து உணவருந்த அனுமதிக்க வேண்டாம்.

5. பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் எக்காரணம் கொண்டும் மாணவர், பெற்றோர் அல்லது ஆசிரியர் ஒன்று கூடல்களை ஏற்பாடு செய்வது மறுஅறிவித்தல் வரை இடைநிறுத்தப்பட வேண்டும்.

6. கடற்கரை ஆற்றங்கரை போன்ற பொது இடங்களில் பொது மக்கள் கூடுவது மறுஅறிவித்தல்வரைதடை செய்யப்பட்டுள்ளது.

7. பொதுச்சந்தை, வர்த்தக நிலையங்கள் போன்றவெற்றில் உரிய சுகாதார நடைமுறைகள் பேணப்படாமை அவதானிக்கப்படுமிடத்து அவற்றுக்கு எதிராக உரிய சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படுவதோடு தேவை ஏற்படின் மேற்படி இடங்கள் 14 நாட்களுக்கு மூடப்படும்.

8. PCR மற்றும் அன்டிஜன் பரிசோதனைகள் மக்கள் கூடியிருக்கும் இடங்கள் மற்றும் கடைத்தெருக்கள் போன்ற இடங்களில் தொடர்ச்சியாக நடைபெறும்.

# வீட்டு சுற்று மதில் விழ்ந்ததில் இளைஞன் பரிதாபகரமாக பலி

## மண்டூரில் சம்பவம்



( சதீஸ், சபேசன்)

வெல்லாவெளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மண்டூர் பிரதேசத்தில் வீட்டு சுற்று மதில் சாய்ந்ததில் முதலாம் பிரிவு, மண்டூர் பிரதேசத்தைச்சேர்நத பேரின்பராஜா பேணுஜன் வயது(18) என்பவர் நேற்று அதிகாலை (16) சம்பவ இடத்தில் பலியாகியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த இளைஞன் தனது இரவுச்சாப்பட்டை உண்டு விட்டு வெளியில் சென்றவர் வீடு திரும்பாத நிலையில் நேற்று அதிகாலை வீட்டார் அவரின் வீட்டுக்கு பின்னால் உள்ள சுற்று மதில் பக்கம் சென்றபோது சுற்று மதில் உடைந்த நிணீலையில் கற்களுக்குள் சிக்குண்டு இறந்த நிலையில் காணப்பட்டதாக விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

களுவாஞ்சிகுடி சுற்றுலா நீதிமன்ற நீதிவான் அவர்களின் உத்தரவிற்கமைவான சம்பவ இடத்திற்கு சென்ற மண்டூர் பிரதேசதிடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சம்ப இடத்திற்கு சென்று சடலத்தை பார்வையிட்டதுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தும் படி பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். தடயவியல் பொலிஸார் மற்றும் வெல்லாவெளி பொலிஸாரும் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கண்டி இந்திய உதவி உயர் ஸ்தானிகர்ஜீவன் தோண்டமான் சந்திப்பு



(தலவாக்கலை பி.கேதீஸ்)

இலங்கைக்கான கண்டி இந்திய உதவி உயர் ஸ்தானிகராக அண்மையில் பதவியேற்றுள்ள அதிரா அவர்களை, தோட்ட வீடமைப்பு மற்றும் சமூதாய உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் சந்தித்து உரையாடினார்.

இலங்கைக்கான கண்டி உதவி இந்திய உயர் ஸ்தானிகர் இல்லத்தில் இடம்பெற்ற இந்த சந்திப்பில் இந்திய உயர் தானிகரின் செயலாளர் கிருஷ்னபிரசாத் ,பிரஜாசக்தி செயற்திட்டத்தின் பணிப்பாளர் பரத் அருள்சாமி மற்றும் அமைச்சரின் இணைப்பு செயலாளர் உட்பட பலர் கலந்துக்கொண்டனர்.

இதன்போது ஆகஸ்ட் (15) கொண்டாடப்பட்ட இந்தியாவின் %5 வது சுதந்திர தினத்திற்கு வாழ்த்துக்களை தெரிவித்த இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் உதவி உயர்ஸ்தானிகராக பதவியேற்றுள்ள டாக்டர் ஆதிரா அவர்களுக்கு பாராட்டுகளையும்,வாழ்த்துக்களையும் தெரிவித்ததுடன் ஞாபக சின்னம் ஒன்றையும் வழங்கிவைத்தார். அத்துடன் இந்த சந்திப்பில் மத்திய மாகாணம், ஊவா மாகாணங்களில் இடம்பெறும் கல்வி அபிவிருத்தி, உட்பட இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியுடன் இடம் பெற்று வரும் வீட்டுத்திட்டம் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் இலங்கை,இந்திய இருதரப்பு உறவுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. மேலும் கொரோனா வைரசை கட்டுப்படுத்தும் அரசாங்கத்தின் வேலை திட்டம் தொடர்பாகவும், மலையகத்திலுள்ள பின்தங்கிய பாடசாலைகளின் அபிவிருத்திகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# கல்முனை மாநகரில் இரவோடிரவாக முளைத்த வியாபார நிலையம்

## அகற்றாவிடின் சட்ட நடவடிக்கை



(காரைதீவு சகா)

கல்முனை மாநகர முற்சந்தியில் சட்டவிரோதமான முறையில் பாதசாரிகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் வியாபார நிலையயம் ஒன்று இரவோடு இரவாக அமைக்கப்பட்டிருந்ததால் சர்ச்சை ஏற்பட்டிருந்தது.

நேற்று (16) காலை குறித்த இடத்திற்கு கல்முனை பிராந்திய தமிழ் இளைஞர் சேனையினர் கல்முனை மாநகர சபை உறுப்பினர் க.சிவலிங்கம் ஆகியோர் சென்றிருந்தனர்.

வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கும் கல்முனை மாநகரசபைக்கும் முறைப்பாட்டை செய்திருந்தனர்.

சம்பவ இடத்திற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை உத்தியோகத்தர்களும், கல்முனை மாநகர சபை ஆணையாளரும் வருகைதந்து ஆராய்ந்தபோது குறித்த வியாபார நிலையம் பாதசாரிகளுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டதால் இதனை இன்று இரவுக்கு முதல் அகற்றுமாறும், இவ்வாறு அகற்றாதபட்சத்தில் சட்ட நடிவடிக்கை எடுப்பதாக கூறப்பட்டுள்ளது.


## கிழக்கிலங்கையின் காரைதீவில் வெளிநாட்டு துரித பொதிகள் சேவையில் புதிய பரிணாமம்




வெளிநாட்டில் இருக்கும் உங்கள் உறவுகள் நண்பர்களுக்கு பொதிகள் மற்றும் ஆவணங்களை துரித வேகத்தில் உரிய முகவரியில் கொண்டு சேர்க்க இன்றே நாடுங்கள்

TA ENTERPRICES & CO வின்
TA PARCEL.LK

துரித வேகம். London, Swiss, France, Canada 3 Days Only) Quick Service
உலகின் எப்பாகத்திற்கும் பொதிகள் அனுப்பும் வசதி. All Countries
பொதிகள் முழு (100%) காப்புறுதி செய்யப்படுகின்றது. 100% Insured
365 நாட்கள் 24 மணி நேர வாடிக்கையாளர்கள் சேவை. 365 Days 24 Hours Service
உரிய முகவரியில் கொண்டு சேர்க்கப்படும். Door to Door Delivery
இணையத்தளம் மூலம் உங்கள் பொதிகள் எங்கு உள்ளது என கண்டறியும் வசதி. Online Tracking System
சிறந்த பொதியாக்கம். Quality Packing
நீங்கள் பொதிகள் ஒப்படைக்கும் போதே Traking Number வழங்கப்படும்.

இவ்வாறான நம்பகதன்மைகளுடன் உங்கள் உறவுகளின் எதிர்பார்ப்புகளை கொண்டு சேர்க்கின்றோம்.

எங்கள் நிறுவனத்தின் ஊடாக பொதிகள் அனுப்பும் ஒவ்வொரு வாடிக்கையாளர்களுக்கும் பெறுமதியான பரிசில்கள் மற்றும் அன்பளிப்புகள் காத்திருக்கின்றது.

அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு விசேட விலைக்கழிவு.

வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் பொதிகளையும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

TA PARCEL.LK | Main Street Karaithivu | taparcel.lk@gmail.com, +947743851511, +94752542651


# கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் நிர்வாகப் பிரிவில் பணிபுரியும் ஒருவருக்கு கோரோனா தோற்று உறுதி

(இஃஜாஸ் ஏ பரீட்)

திருகோணமலையில் உள்ள கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் நிர்வாகப் பிரிவில் பணிபுரியும் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டதால் அப்பிரிவு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

திருகோணமலை சுகாதார வைத்திய அதிகாரியினால் அப்பிரிவில் பணிபுரிந்தோருக்கு அன்ரிஜன் பரிசோதனை மேற்கொள்ளப் பட்டதோடு கடந்த 14 ஆம் தகமுதல் சுயதனிமைப்படுத்தலில் இருக்குமாறு அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாகவே கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் நிர்வாகப் பிரிவு தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.

# 100 படுக்கை விரிப்புகள் 500 குடிநீர் போத்தல்கள் வழங்கிவைப்பு



(கதிரவன்)

திருகோணமலை நகைமாளிகை சங்கம் பொது வைத்தியசாலையின் வேண்டுகோளுக்கு அமைய 100 படுக்கை விரிப்புகளையும் 500 குடிநீர் போத்தல்களையும் நேற்று திங்கட்கிழமை வழங்கி வைத்துள்ளனர்.

அனுமதிக்கப்படும் கொவிற் தொற்றாளர்களுக்கு வழங்குவதற்காக இதனை நாம் வழங்கி வைத்ததாக சங்க நிர்வாகிகள் தெரிவித்தனர். பொது வைத்தியசாலை பணிப்பாளர் மருத்துவர் ஜெகத்விக்கிரமரத்னவிடம் நகைமாளிகை சங்க தலைவர் ரி.எம்.ஹணி வழங்கி வைத்தார்.

சங்கத்தின் செயலாளர் பு.அம்ஜாட், பொருளாளர் வி.சுஜந்தன் ஆகியோரும் இதில் பங்கு கொண்டனர்.

SwissLife
Select

சுவிசில் சொந்த வீடு
வாங்க விரும்பும் உறவுகளே,
அவதானமாகச் செயற்படுங்கள்.
உங்கள் கடனுக்கான வட்டி வீதம்
எப்போதும் அதிகரிக்க கூடும்.
எனவே, சரியான வங்கியையும்,
வட்டி வீதத்தையும்
தெரிந்து கொள்ளுங்கள்.

உங்கள் வாழ்வின் சகல
அம்சங்களிலும் உங்களோடு
கரங் கோர்க்கும்
ஒரே ஒரு நிறுவனம்...

மருத்துவ காப்புறுதி
வாகனக் காப்புறுதி
குழந்தைகளுக்கான காப்புறுதி
ஆயுட் காப்புறுதி
சட்டக் காப்புறுதி



Herr Krishnasamy
THILEEPAN
Dipl.Finanzberater IAF
Cicero : 15787
FIDLEG : KT 47598
Swiss Life Select AG
Zweigniederlassug Bern-Köniz
Sägerstrasse 79, 3098 Köniz.

Email : krishnasamy.thileepan@swisslife-select.ch Web : www.swisslife-select.ch
Telefon : 031 915 00 50 Telefax : 031 915 00 60 Handy : 079 889 60 65



உதயகுமார் கல்வி நிலையம்



முனைக்காடு மேற்கு,
கொக்கட்டிச்சோலை
தொடர்புகளுக்கு:
076-1549129
+966539028295
+966502126923
n.uthayakumar1981@gmail.com



SHELVA SWISS
YOUR FUTURE OUR VISION
041 790 64 63 079 514 64 28

வீட்டுக்கடன்
0.62%
தொடக்கம்

10% இல்
சொந்த வீடு கட்ட
அல்லது வாங்க

- இருக்கும் வீட்டை வைத்து இன்னொரு வீட்டை வாங்க...
- வீடு வாங்க. விற்க, கட்ட, திருத்த...
- வீடு வாங்குவதற்கான ஆயுட்காப்புறுதி
- Architect வேலைகள்

இலங்கையில் வீடுகள், காணிகள்,
விற்க, வாங்க, கட்ட, திருத்த

இலங்கைக்கு போக
வேண்டிய தேவை இல்லை.
SWISS இல் இருந்து
கொண்டே செய்யலாம்.

» கிறங்கன்காசே
» ஆயுட்காப்புறுதி
» பயணக்காப்புறுதி
» சட்டக் காப்புறுதி





SRI JEWELLERY
Swiss, Zürich இல் மிகப்
பிரமாண்டமாய் புதுப்பொலிவுடன்

பரம்பரை பரம்பரையாக
நகைத் தொழிலில்
அனுபவம் பெற்றவர்கள் நாங்கள்

வைர தாலி கொடி, மோதிரம், வளையல்
பெயர் பெண்டன், மற்றும் அனைத்து
நகைகளும் செய்து தரப்படும்.

திருத்த வேலைகளும் உடனுக்குடன்
செய்து தரப்படும்.

+41 43 366 80 09 / +41 79 898 51 01
Mattengasse 17, 8005, Zürich, Swiss
info@srijewellery.ch



5ம், 6ம் ஆண்டு மாணவர்களுக்கான
புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்

எங்கே? சூரிச் மாநகரில் கணினித்துறையில்
நூற்றுக்கணக்கான மாணவர்களை உருவாக்கிய
Online Tech Network
நிறுவனத்தில்

ECDL
Office
Windows 10



தொடர்புகளுக்கு
MANOJ MASTER
Online Tech Network
Militärstrasse 84, 8004 Zürich
043 811 80 90, 076 524 80 59



Aaran Ayurveda
& Wellness Massage



Stampfenbachstrasse-24, 8001 Zurich, Tel: 043 243 60 66
Mobile: 079 940 1510 | www.aaranayurveda.ch
Krankenkasse Anerkannt

## போலியான ஒரே இலக்கத்தகடு பொறிக்கப்பட்ட கார்கள் காத்தான்குடியில் மீட்பு

(ஜவ்பர்கான்)

போலியான ஒரே இலக்கத்தகடு பொறிக்கப்பட்ட இரு கார்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறி தெரிவித்தார். இதில் ஒரு காரை காத்தான்குடியில் வைத்து மட்டக்களப்பு விஷேட பொலிஸ் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

CP CAI 9272 , 9272. இலக்கங்கங்கள் பொறிக்கப்பட்ட காரையே காத்தான்குடியில் வைத்து மட்டக்களப்பு விஷேட பொலிஸ் பிரிவினர் கைப்பற்றி காத்தான்குடி பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

குறித்த போலி இலக்கம் இரண்டு கார்களுக்கு பொறிக்கப்பட்டுள்ளதாக பொலிசாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளதுடன் இதில் ஒரு கார் காத்தான்குடியில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளதுடன் மற்றய கார் வேறு ஒரு பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அது தொடர்பான விசாரணைகள் இடம் பெற்றுவருவதாகவும் காத்தான்குடி பொலிசார் குறிப்பிட்டனர்.

குறித்த காரின் ஆவணங்கள் காரை வைத்திருந்த காத்தான்குடி நபரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளதுடன் காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயணிசிறியின் தலைமையில் விசாரணைகள் இடம் பெற்றுவருவதாகவும் காத்தான்குடி பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்இ மட்;டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோரின் ஆலோசனையிலும் வழிகாட்டலிலும் துரிதமாக விசாரணைகள் இடம் பெற்று வருவதாகவும் காத்தான்குடி பொலிசார் மேலும் தெரிவித்தனர்.

## மருதமடு ஆலய பெருவிழா







(வாஸ் கூஞ்ஞ)

கடந்த 6ந் திகதி கொடியேற்றத்துடன் தொடங்கிய இப் பெருவிழா கடந்த ஒன்பது நாட்கள் நவ நாட்கள் இடம்பெற்றதுடன் சனிக்கிழமை(14) நற்கருணை விழாவும் இதையடுத்து நற்கருணை பவனியும் இடம்பெற்றதைத் தொடர்ந்து சிலாபம் மறைமாவட்ட ஆயர் மேதகு வலன்ஸ் மென்டிஸ் ஆண்டகை நற்கருணை ஆசீரும் அன்று வழங்கினார். ஞாயிற்றுக்கிழமை (15) காலை 6.15 மணிக்கு நடைபெற்ற மருதமடு அன்னையின் பெருவிழா திருப்பலியானது மன்னார் மறைமாவட்டத்தின் ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் சிலாபம் ஆண்டகை மேதகு வலன்ஸ் மென்டிஸ் ஆண்டகை உட்பட அருட்பணியாளர்கள் இணைந்து கூட்டுத் திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர் .இதைத் தொடர்ந்து வழமைபோன்று திருச்சூருப பவனியும் அன்னையின் திருச்சூருப ஆசீரும் சிலாபம்ஆயரால் வழங்கப்பட்டது. இவ் திருவிழா காலங்களில் மன்னார் ஆயரால் இவ் திருத்தலத்திருந்து மறைமாவட்ட மக்களுக்கு வருடத்தில் இருமுறை வழங்கப்படும் அப்போஸ்தலிக்க மரிஅன்னைஆகியோரின் பரிபூரணபலன் கொண்ட ஆசீரும் அங்கு கூடியிருந்த இறை மக்களுக்கும் மற்றும் கொரோனா காரணமாக ஆலயம்வரமுடியாது வீடுகளிலிருந்து இவ் திருவிழாவை தொலைக்காட்சிகளின் மூலம் இணைந்து இருந்தயாவருக்கும் மன்னார் மநைமாவட்ட ஆயர் மேதகுஇம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை திருச்பையின் தாய் மொழியாம் லத்தீன் மொழியில்வழங்கியதும் குறிப்பிடதக்கது.

## ஆசிரியப் பணியில் இருந்து ஓய்வு



(ரக்ஸனா)

வருடம் விஞ்ஞானப் பாட அசிரியராக பணியாற்றிய திருமதி உமா பாஸ்கரி மயில்வாகனம் அவர்கள் தனது 60ஆவது வயதில் அரச பணியிலிருந்து திங்கட்கிழமை ஓய்வு பெற்றுள்ளார்..

திருமதி உமாபாஸ்கரி மயில்வாகனம் அவர்கள் திருகோணமலை கூட்டாம்புளி தம்பலகாமம் என்னும் இடத்தில் பிறந்து தம்பலகாமம் சாரதா வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியையும், தம்பலகாமம் மகா வித்தியாலயத்தில் இடைநிலைக் கல்வியையும் திருகோணமலை ஸ்ரீசண்முகா வித்தியாலயத்தில் உயர்கல்வியையும் கற்று கிழக்குப் பல்கலைக்கழக வரலாற்றில் முதலாவது தொகுதி மாணவர்களுக்கான விஞ்ஞானமானிப் பட்டத்தினையும் பெற்றுக்கொண்டார்.

மட்டக்களப்பு களுதாவளையில் வசித்துவரும் இவர் முன்னாள் மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் மயில்வாகனம் அவர்களின் துணைவியாவார்.

விஞ்ஞானப் பட்டதாரியான இவர் உயிரியல் பாட ஆசிரியராக திகோணமலை கிண்ணியா மத்திய மகா வித்தியலயத்தில் முதல் நியமனத்தையும், திருகோணமலை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, ஸ்ரீசண்மகா வித்தியாலம் ஆகிய பாடசாலைகளிலும் கடமையாறியதுடன் கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரி, களுதாவளை மகா வித்தியாலயம் ஆகியவற்றில் கடமையாற்றியுள்ளார். அத்தோடு களுதாவளை மகா வித்தியாலய உயர்தர விஞ்ஞாப்பிரிவின் ஆரம்ப கர்த்தாங்களில் முதல் இவர் ஆசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் செட்டிபாளையம், கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலைகளிலும் ஆசிரியராக பணியாற்றியுள்ளார்.

இவர் தனது சேவைக் காலதத்ணீல் அற்பணிப்போடும், நேரிய சிந்தனையோடும் மாணவர்களின் கல்வி அபிவிருத்தியில் மட்டில்லாப் பணியாற்றியது மட்டுமல்லாது களுதாவளை மகா வித்திலாயத்தின் உதவி அதிபராகவும் இருந்து பாடசாலை முகாமைத்துவப் பணிகளையும் சிறப்பாக முன்னெடுத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் பீடாதிபதியானார் பேராசிரியர் எம்.எம். பாஸில்



(நிந்தவூர் நிருபர்)

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் ஆரம்பப் பீடங்களுள் ஒன்றாக விளங்கும் கலை கலாசார பீடத்தின் பீடாதிபதியாக, அரசியல் விஞ்ஞானத் துறைத் தலைவர் பேராசிரியர் கலாநிதி எம்.எம். பாஸில் தெரிவு செய்யப்பட்டுள்ளார். கலை கலாசார பீடத்திற்கான புதிய பீடாதிபதியினைத் தெரிவு செய்யும் நிகழ்வு நேற்று (16) காலை 10 மணிக்கு கலை கலாசார பீடத்தின் கேட்போர் கூடத்திலும் சூப் நிகழ்நிலை ஊடாகவும் இடம்பெற்றது.

தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி ஏ. றமீஸ் அவர்கள் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தினுடைய உயர் சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். இந்நிகழ்வில் சபையினரின் ஏகமனதான தீர்மானத்தின் அடிப்படையில் பேராசிரியர் கலாநிதி எம்.எம். பாஸில் அவர்கள் போட்டியின்றி கலை கலாசார பீடத்திற்கான புதிய பீடாதிபதியாகத் தெரிவு செய்யப்பட்டார். கலை கலாசார பீடத்தின் பழைய மாணவரான பேராசிரியர் எம்.எம். பாஸில் அடுத்த மூன்று ஆண்டுகளுக்கு அப்பீடத்தின் பீடாதிபதியாகச் செயற்படவுள்ளார்.

மர்ஹூம் வெள்ளைக்குட்டி மன்சூர், முஹம்மது இப்றாஹிம் உம்மு சல்மா தம்பதியினரின் மூத்த புதல்வரான பேராசிரியர் எம்.எம். பாஸில், 1974ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 07ஆம் திகதி மருதமுனையில் பிறந்தார். இவர் தனது பாடசாலைக் கல்வியினை மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியில் பெற்றுக்கொண்டார். உயர்தரத்தில் கலைப் பிரிவினைத் தெரிவு செய்திருந்த இவர், உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட முதற்தொகுதி மாணவர்களுள் ஒருவராக இருந்தார். பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத்தினை விசேட துறையாகத் தெரிவு செய்து, அதில் சிறப்புச்சித்திபெற்றார். பேராசிரியர் எம்.எம். பாஸில் பல்கலைக்கழகக் கல்வியில் சிறந்து விளங்கியதுடன் மட்டும் நின்றுவிடமால் ஏனைய சமூகம்சார் செயற்பாடுகளிலும் அக்கறையுடன் செயற்பட்டிருந்தார். மாணவப் பருவத்திலிருந்தே மற்றவர்களுக்கு உதவும் குணவியல்பினை வளர்த்துக் கொண்ட பேராசிரியர் எம்.எம். பாஸில், தன்னுடன் கற்ற - தான் கற்பித்த பல மாணவர்கள் கல்வியில் உயர்ந்து நிற்பதற்கு அளப்பரிய பங்களிப்பினைச் செய்தார்.

2000ஆம் ஆண்டு அரசியல் விஞ்ஞானத் துறையில் சிறப்புப் பட்டத்தினை நிறைவுசெய்த பேராசிரியர் எம்.எம். பாஸில், பின்னர் அத்துறையின் விரிவுரையாளர் குழாமில் இணைத்துக்கொள்ளப்பட்டார். தென்கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர்கள், நிருவாகிகள், விரிவுரையாளர்கள், போதனைசாரா ஊழியர்கள், மாணவர்கள் என பல்கலைக்கழக சமூகத்துடன் நல்லுறவினைப் பேணிவந்த இவர், ஆரம்பம் முதல் பல்கலைக்கழகத்தினதும் கலை கலாசார பீடத்தினதும் அரசியல் விஞ்ஞானத் துறையினதும் வளர்ச்சிக்கு குறிப்பிடும்படியான பங்களிப்பினை வழங்கியுள்ளார். தான் ஒரு நிரந்தர விரிவுரையாளராக நியமிக்கப்பட்டதன் பின்னர், ஜப்பான் நாட்டின் ஜெய்க்கா புலமைப் பரிசில் பெற்று, அந்நாட்டின் தலைசிறந்த பல்கலைக்கழகங்களுள் ஒன்றாகிய மேஜி பல்கலைக்கழகத்தில் அரசியல் விஞ்ஞானத் துறையில் முதுமாணிப் பட்டத்தினை நிறைவுசெய்தார். பின்னர் உலக வங்கியின் நிதிப் புலமைப்பரிசில் பெற்று உலகத் தரம் வாய்ந்த மலேசியாவின் மலாயாப் பல்கலைக்கழகத்தில் கலாநிதிக் கற்கையினையும் நிறைவு செய்துள்ளார்.

பேராசிரியர் எம்.எம். பாஸில் இலங்கை முஸ்லிம் அரசியல், இனத்துவப் பிணக்குகள், சமூக நல்லிணக்கம், மனித உரிமைகள், சர்வதேச உறவுகள் போன்ற துறைகளில் சிறப்புத் தேர்ச்சி பெற்றுள்ளார். அத்துறைகள் தொடர்பான பல கட்டுரைகளையும் நூல்களையும் எழுதி வெளியிட்டுள்ளார். அவரது கட்டுரைகள் பல உலகத் தரம்வாய்ந்த ஆய்வுச் சஞ்சிகைகளில் வெளிவந்துள்ளன. சமூக - அரசியல் இயங்குநிலை குறித்த அவரது ஆய்வு முடிவுகள் தேசிய - சர்வதேச ஆய்வு மாநாடுகளில் சமர்ப்பிக்கப்பட்டு மிகுந்த வரவேற்பை பெற்றவை. பல்கலைக்கழகக் கல்வித் துறையில் அவர் அடைந்துள்ள உயர்ச்சியினால் 2019ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் பேராசிரியராக செயற்படும் வகையில் அவருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது. இலங்கை முஸ்லிம்கள் சார்பில் அரசியல் விஞ்ஞானத் துறையில் பேராசிரியர் பதவி உயர்வு பெற்ற முதல் நபர் இவரே என்பதும் குறிப்பிடத்தக்கது. முஹம்மது முஸம்மில் றஸ்மியா என்பவரை திருமணம் செய்துள்ள பேராசிரியர் எம்.எம். பாஸில் தம்பதியினருக்கு ஜுஸைல், முஆத், உமர் காஸிப் ஆகிய மூன்று ஆண் குழந்தைகள் உள்ளனர்.

முன்னர் குறிப்பிட்டதுபோல் பேராசிரியர் எம்.எம். பாஸில் பல்கலைக்கழக கற்றல் - கற்பித்தல் - நிருவாகச் செயற்பாடுகளில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர்; தனக்கு ஒப்படைக்கப்படும் பணியினை செவ்வனே நிறைவேற்றுவதில் உறுதியாக நிற்பவர்; தனது சக விரிவுரையாளர்களும் மாணவர்களும் உயர்ந்து நிற்பதில் மன மகிழ்ச்சி கொள்பவர்; தனது பல்கலைக்கழகமும் பீடமும் துறையும் புதுமைகளைப் படைக்க வேண்டும் என்பதில் அதிக ஆர்வம் கொண்டவர்; கலை கலாசார பீடத்தின் முன்னாள் பீடாதிபதிகளுக்கு தோல்கொடுத்து பீடத்தின் வளர்ச்சிக்கு அளப்பரிய பங்காற்றியார். அத்தகைய ஒருவர் இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் புதிய பீடாதிபதியாக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டிருப்பது அப்பீடத்தின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதாகும்.

### மட்டு. போதனா வைத்தியசாலையில் குருதித் தட்டுப்பாடு

## குருதிக் கொடையாளர்களுக்கு அன்டிஜென், பி.சீ.ஆர் பரிசோதனைகள் இடம்பெறாது

(துறையூர் தாஸன்)

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு அதிகளவு குருதி தேவை உள்ளதனால் குருதி கொடையாளர்கள் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

கொறொனா வைரஸ் தொற்றுப் பரவல் காரணமாக குருதிக் கொடையாளர்களின் வரவு கணிசமாக குறைந்துள்ளமையினாலே மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் குருதித் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பல்வேறு நோய் நிலைகளில் உள்ளவர்களுக்கு நாளொன்றுக்கு சுமார் ஐந்நூறுக்கு மேற்பட்ட குருதி பக்கெற்றுக்கள் தேவைப்படுவதனால் குருதித் தானம் செய்ய முன்வரும் குருதிக் கொடையாளர்கள் பாதுகாப்பான விதிமுறைகளுடன்

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிப் பிரிவை நாடி குருதிக் கொடைகளை வழங்குமாறும் குருதிக் கொடையாளர்களுக்கு, அன்டிஜென் மற்றும் பீ.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படாது என்பதும் குறிப்பிடத்தக்கது.




## சக்கர நாற்காலிகள் அன்பளிப்பு



(தலவாக்கலை பி.கேதீஸ்)

இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் தலைவர் ஆர். ரமேஷ்வரன் அவர்களின் வேண்டுகோளுக்கமைய குருணாகல் மாவட்டத்தில் மாவத்தகம சிங்ஹாலோக்கபுர பிரதேசத்தில் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டு கால்களை இழந்த ஒருவருக்கும் மாத்தளை கந்தேநுவர அல்வத்த கீழ்பிரிவு தோட்டத்தில் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டு கால்களை இழந்த ஒருவருக்கும் சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டன.

மேலும் அக்குடும்பங்களுக்கு தேவையான உலர் உணவுப் பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டதோடு அவர்களின் பிள்ளைகளுக்கு செயலி ஊடாக கல்வி பயில்வதற்கு புதிய ஸ்மார்ட் கையடக்கத்தொலைபேசி ஒன்றும் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் இரத்தினபுரி உதவும் கரங்கள் அமைப்பின் சிரேஷ்ட அங்கத்தவரும் கேகாலை மாவட்ட அமைப்பாளருமான சு.அமுதன், ஏ.பத்மசிரி மற்றும் யோகேஸ்வரன் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

## பக்தர்களின்றி நடந்தேறிய சித்தரின் 70வது குருபூஜை!

ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமியின் 70வது குருபூசை காரைதீவு ஸ்ரீ சித்தானைக் குட்டி சுவாமி ஆலயத்தில் யாகமும் பூசை வழிபாடுகளுடன் இடம்பெற்றது.

இம்முறை நாட்டில் மிகவேகமாக பரவிவருகின்ற கொரோனா நோய் காரணமாக ஸ்ரீ போகரின் அவதாரமாகிய ஸ்ரீ சித்தானைக்குட்டி சுவாமியின் 70வது குருபூசை நிகழ்வானதுஇ மிகுந்த கட்டுப்பாடுகளுடன் ஆலயநிருவாகத்தினர் மாத்திரம் பங்கேற்ற யாகமும் இகுருபூஜையும் மாத்திரமே இடம்பெற்றது.



அதன்போதான படங்கள் இவை.
படங்கள் வி.ரி.சகாதேவராஜா




# நிந்தவூரில் கொரோனா விழிப்புணர்வு பதாகைகள் திரை நீக்கம்

(நூருல் ஹுதா உமர்)



நாட்டில் தீவிரமடைந்து வரும் கொவிட் 19 கொரோணா தொற்றில் இருந்து மக்களை பாதுகாக்கும் வகையில் விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகளை நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் நிந்தவூர் கொவிட் தடுப்பு செயலணியுடன் இணைந்து தொடர்ந்தும் மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கமைய நிந்தவூர் பிரதேசத்திற்குள் உள்நுழையும் பிரதான பாதைகளில் கொவிட் தொற்றில் இருந்து பாதுகாப்பு பெறுவதற்கான ஆலோசனைகள் அடங்கிய பதாகைகள் காட்சிப் படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

நிந்தவூர் பிரதான வீதியின் தென்புற எல்லையில் ஏற்படுத்தப்பட்டுள்ள கொரோணா விழிப்புணர்வு பதாகை திரை நீக்கம் செய்து வைக்கும் நிகழ்வு நிந்தவூர் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் பறூசா நக்பர் தலைமையில், இலங்கை இராணுவத்தின் 241 வது படைப்பிரிவின் கட்டளைத் தளபதி பிரிகேடியர் கேணல் ஏ.எம்.சி அபயகோனின் பங்குபற்றலுடன் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் நிந்தவூர் கொவிட் தடுப்பு செயலணியின் உறுப்பினர்களான நிந்தவூர் ஜுºம்ஆ பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபை தலைவர் எஸ்.எம்.பி.எம் பாறூக் இப்ராஹிம், அம்பாறை மாவட்ட பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் செயலாளர் ஏ எல் அன்வர்டீன், நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஷகிலா இஸ்ஸதீன், நிந்தவூர் ஆயுள்வேத ஆராய்ச்சி தொற்றா நோய் வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் கே எல் நக்பர் உட்பட சுகாதாரத்துறை ஊழியர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# மீன்பிடி தோணிகள் வழங்கிவைப்பு



(ஹஸ்பர் ஏ ஹலீம்)

கந்தளாய் பிரதேச சபை உறுப்பினர் ஏ.சீ.எம். ஜவாஹிர் அவர்களின் முன்மொழிவினூடாக அல் ஹிக்மா பவுன்டேசனினால் கந்தளாய் பிரதேச சுயதொழில் பயனாளிகள் சிலருக்கு நேற்று முன்தினம் மீன் பிடி வல்லங்கள் வழங்கிவைக்கப்பட்டது.

இந்நிகழ்வானது கந்தளாய் குளத்தில் வைத்து கந்தளாய் பிரதேச சபை தவிசாளர் சமன் ஏக்கநாயக்க, அல் ஹிக்மா பவுன்டேசன் பணிப்பாளர் கலாநிதி இபாதுல்லா மௌலவி ஆகியவர்களின் பிரதான பங்குபற்றலுடன் நடைபெற்றது

கந்தளாய் பிரதேச சபையை பிரநிதித்துவப்படுத்தும் அனைத்து வட்டாரங்களையும் உட்படுத்தும் வகையில் இப்பயனாளிகள் சபை உறுப்பினர் ஏ.சீ.எம். ஜவாஹிர் அவர்களின் முன்மொழிவினூடாக தெரிவுசெய்யப்பட்டது.கந்தளாய் பிரதேச சபை உறுப்பினர் ஜவாஹிர் அவர்களின் முன்மொழிவினூடாக இந்த உதவியை வழங்கிய அல் ஹிக்மா பவுன்டேசன் பணிப்பாளர் கலாநிதி இபாதுல்லா மௌலவி அவர்களுக்கு உறுப்பினர் நன்றிகளையும் நல்வாழ்த்துக்களையும் இதன்போது தெரிவித்தார்.

# மட்டக்களப்பில் தரமுயர்த்தப்பட்ட பாடசாலைகளுக்கான ஆவணங்கள் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனினால் வழங்கிவைப்பு

( எஸ்.எஸ்.அமிர்தகழியான்)



நாட்டினுடைய மேன்மை தங்கிய ஜனாதிபதியின் நாட்டை சுபீட்சத்தின் பால் கட்டியெழுப்பும் தேசிய வேலைத்திட்டத்திற்கு அமைவாக 'அனைவருக்கும் கல்வி' என்னும் தொனிப் பொருளிற்கு அமைவாக நாடளாவிய ரீதியில் பாடசாலைகள் தரமுயர்த்தப்பட்டுவரும் நிலையில் மட்டக்களப்பில் தரமுயர்த்தப்பட்ட பாடசாலைகளுக்கான உத்தியோக பூர்வ ஆவணங்களை வழங்கிவைக்கும் நிகழ்வு ஞாயிற்றுக் கிழமை மட்டக்களப்பில் இடம்பெற்றுள்ளது.

மாவட்டத்தில் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்ட ஒன்பது பாடசாலைகளுக்கான உத்தியோகபூர்வ ஆவணங்களை வழங்கிவைக்கும் நிகழ்வானது மட்டக்களப்பில் உள்ள இராஜாங்க அமைச்சரின் அலுவலகத்தில் இடம்பெற்ற போது குறித்த நிகழ்விற்கு பின்தங்கிய கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ ஆவணங்களை தரமுயர்த்தப்பட்ட பாடசாலைகளான மட்/பழுகாமம் கண்டுமணி மகாவித்தியாலயம், மட்/அரசடித்தீவு விக்னேஸ்வரா வித்தியாலயம், மட்/காக்காச்சிவெட்டை விஸ்ணு வித்தியாலயம், மட்/நாவற்காடு நாமகள் வித்தியாலயம், மட்/கரடியனாறு மகாவித்தியாலயம், மட்/செங்கலடி மத்திய கல்லூரி, மட்/வந்தாறுமுலை விஸ்ணு வித்தியாலயம், மட்/சித்தாண்டி மத்திய மகா வித்தியாலயம், மட்/புதுக்குடயிருப்பு கண்ணகி வித்தியாலயம் உள்ளிட்ட பாடசாலைகளில் அதிபர்கள் மற்றும் பாடசாலைகளின் நிருவாகத்தினரிடம் ஒப்படைத்துள்ளார்.

மாவட்டத்தில் நீண்டகாலமாக தரமுயர்த்தப்படாமல் இருந்து வந்த பாடசாலைகள் தற்போதுள்ள அரசினால் தரமுயர்த்தப்பட்டுள்ளதுடன், மேலும் தகுதிவாய்ந்த பல பாடசாலைகளை தரமுயர்த்துவதற்கான வேலைத்திட்டங்களை தான் முன்னெடுத்துவருவதாகவும், தரமுயர்த்தப்பட்டுள்ள தேசியப் பாடசாலைகளுக்கு தேவையான அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முன்மொழிவுகளை வழங்கும்பட்சத்தில் அவற்றை மிக விரைவாக நிவர்த்தி செய்து தருவதுடன், இவ்வாறான தரமுயர்த்தல் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கிய கல்வி அமைச்சர் உள்ளிட்ட நாட்டின் மேன்மைதங்கிய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் உள்ளிட்ட அனைவருக்கும் இதன்போது நன்றி தெரிவித்திருந்தார்.

இந்நிகழ்வில் இராஜாங்க அமைச்சரின் பிரத்தியேக செயலாளர்கள், அதிபர்கள், உப அதிபர்கள், பழைய மாணவர்கள் உள்ளிட்ட பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

# மேச்சல் தரைக்குரிய நிலங்களை விடுவிப்பதற்கு அரச அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்

(எம்.ஐ.எம்.றியாஸ்)



இறக்காமம் கொக்லாங்கலில் கால்நடை பண்ணையாளர்களின் மேச்சல் தரைக்குரிய 600 ஏக்கர் நிலங்களை விடுவிப்பதற்கு அரச உயர் அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என இறக்காமம் பிரதேச சபையின் உதவித்தவிசாளர் மௌலவி ஏ.எல்.நௌபர் தெரிவித்தார்

கால்நடை பண்ணையாளர்களின் மேய்ச்சல் தரைப் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு கிடைக்க வேண்டும் என வலியுறுத்தி இறக்காமம் வில்லு குளத்திற்கு சொந்தமான குளத்தை அண்டிய பகுதிகளுக்கு கால்நடைப் பண்ணையாளர்கள் மற்றும் இறக்காமம் பிரதேச சபையின் உதவித்தவிசாளர் மௌலவி ஏ.எல். நௌபர் உள்ளிட்டவர்கள் சென்று குறிப்பிட்ட இடங்களைப் பார்வையிட்டனர். இதன்போது கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

இது விடயமாக அவர் மேலும் தெரிவித்ததாவது,

இறக்காமம் வில்லு குளத்திற்கு சொந்தமான குளத்தை அண்டிய பகுதிகளை அப்பகுதியில் வாழும் மாட்டுப் பண்ணையாளர்கள் மேய்ச்சல் தரைக்கு பயன்படுத்தி வந்த நிலையில் அண்மைக்காலமாக சிலரின் அதிகார வலுவுடன் அப்பகுதிகளில் விவசாயம் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.இதுபற்றி இறக்காமம் பிரதேச சபை அமர்விலும் பேசியுள்ளேன்.

இறக்காமம் வில்லுக் குளமானது இலங்கையில் காணப்படும் இரு நன்னீர் குளங்களில் ஒன்றாகும்.

அன்னளவாக 2900 ஏக்கர் கொண்ட இக்குளம் பல வழிகளில் மக்களுக்கு நன்மை பயக்கின்றது. குறிப்பாக 500 மேற்பட்ட குடும்பங்கள் நன்னீர் மீன்பிடியில் ஈடுபடுகின்றனர்.

இக்குலம் ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல் நிலங்களுக்கு நீர் வழங்கும் பாய்ச்சல் குளமாக காணப்படுகிறது. மேலும் 600 ஏக்கருக்கும் அதிகமான இக்குளத்தின் உயர் மட்ட எல்லைப் பகுதிகள் மாட்டுப் பண்ணையாளர்களின் மேய்ச்சல் தரையாகவும் மாடுகள் நீர் அருந்தி ஓய்வெடுக்கும் பகுதியாகவும் இருந்து வருகிறது.

இருப்பினும் அண்மைக்காலமாக குளத்திற்கு சொந்தமான இம்மேட்டு நிலப் பகுதிகள் அயலில் உள்ள விவசாயக் காணிச் சொந்தக்காரர்களால் அடாத்தாக ஆக்கிரமிக்கப்பட்டு குளத்தை நம்பி வாழ்ந்த பல்லாயிரக் கணக்கான மாடுகளின் மேய்ச்சல் தரை அழிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

மேலும் குளத்தின் உயர் மட்ட மேட்டு நிலத்தை நம்பி வாழ்ந்த நூற்றுக்கு மேற்பட்ட பண்ணையாளர்களின் வாழ்வாதாரம் இல்லாமல் செய்யப்பட்டு மாடுகளின் மேய்ச்சல் நிலமும் இல்லாமல் ஆக்கப்பட்டு பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக மாட்டுப் பண்ணையாளர்கள் அயல் பிரதேசங்களான தமன,எக்கல் ஓயா, பிபிலை போன்ற பிரதேசங்களுக்கு தங்களது மாட்டுப் பண்ணைகளை நகர்த்தியுள்ளதோடு பல்லாயிரக்கணக்கான ரூபாய்களை நில வாடகையாக கொடுத்து பண்ணைகளை நடாத்தி வருகின்றனர். சிலர் தாங்கள் தொன்று தொட்டு குளத்தை அண்டி நடாத்தி வந்த குளத்தின் மேட்டு நில பண்ணைப் பகுதிகள் ஆக்கிரமிக்கப்பட்டதன் காரணமாக மாடுகளை விற்பனை செய்து வருகின்றனர்.

அதிகமான மாடுகள் மேய்ச்சல் இன்றி பட்டினியால் இறக்கின்றன. மாடுகள் பல்வேறு கொல்லை நோய்களுக்கு உள்ளாகி பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.தற்போது பண்ணையாளர் சமூகம் அழிந்து வரும் நிலை உருவாகியுள்ளது.எனவே இறக்காமம் கொக்லாங்கல் வில்லு குளத்திற்கு அருகாமையில் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள குளத்தின் உயர் எல்லைப் பகுதிகளை விடுவித்து தருவதோடு அதனை அடையாளப்படுத்தி உறுதிப்படுத்துவதன் ஊடாக பல்லாயிரக்கணக்கான மாடுகளின் வாழ்வாதரத்தை உறுதிப்படுத்தி தருமாறு விசனத்துடன் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளிடம் கோரிக்கையினை முன்வைப்பதாக தெரிவித்தனர்.இறக்காமம் பண்ணையாளர் அபிவிருத்தி கூட்டுறவு சங்கத்தின் தலைவர் யூ.எல். ஜெமீல், செயலாளர் ஏ.ஜஃபர் மற்றும் பண்ணையாளர்கள் கலந்து கொண்டனர்.

# ஆறு மாதங்களின் பின்னர் அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்:

( வி.ரி.சகாதேவராஜா)

அம்பாறை மாவட்ட ஒருங்ணைப்புக் குழுக்கூட்டம் கடந்த ஆறுமாதங்களின் பின்னர் நேற்று(16) திங்கட்கிழமை சூம் தொழினுட்பத்தில் நடைபெற்றது.

கடந்த பெப்ருவரி மாதம் இறுதியாக குறித்த கூட்டம் இடம்பெற்றிருந்தது. தொடர்ந்து கொவிட் காரணமாக மாதா மாதம் நடைபெறவேண்டிய இக்கூட்டம் நடைபெறவில்லை.

நேற்று முதல்தடவையாக சூம்தொழினுட்பத்தின் மூலம் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுத்தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் வீரசிங்க தலைமையில் நடைபெற்றது.



அம்பாறை மாவட்டச்செயலாளர் டி.எம்.எல்.பண்டாரநாயக்கவின் ஒழுங்கமைப்பில் பிரதானதலைவர் உள்ளிட்டோர் அம்பாறை பிரதேசசெயலகத்தில் இருந்து இக்கூட்டத்தை நடாத்தினர்.

கல்முனைப்பிராந்திய சுகாதாரசேவைப்பணிப்பாளர் வைத்தியகலாநிதி டாக்டர் குண.சுகுணன் கல்முனைப்பிராந்திய சமகால கொவிட் நிலைவரம் தொடர்பாகவும் தாம் எதிர்நோக்கும் சவால்கள் மற்றும் அவசரதேவைகள் தொடர்பாகவும் கல்முனை அலுவலகத்திலிருந்தவாறே ஆதாரபூர்வமாக விளக்கமளித்தார்.

அதுதொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர்களான டாக்டர் திலக்ராஜபக்ச பைசால் காசிம் உள்ளிட்டோருமம் தத்தமது கருத்துக்களை தெரிவிதத்தார்.




# மதுரை ஆதீனக் குரு முதல்வர் மறைவுக்கு நல்லை ஆதீன முதல்வரின் பிரார்த்தனை

(வடமராட்சி நிருபர்)

சைவத்துக்கும் தமிழுக்கும் தொண்டு செய்த மதுரை ஆதீனத்தின் 292 ஆவது குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பரிபூரணம் பெற்றமையையிட்டு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் இலங்கை வாழ் சைவ மக்கள் சார்பில் தனது பிரார்த்தனைகளைத் தெரிவித்துள்ளார்.

அவர் அனுப்பி வைத்துள்ள பிரார்த்தனைச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாணம் நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் தாய்வீடாகத் திகழ்வது மதுரை ஆதீனம் ஆகும். இந்த ஆதீனம் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பாண்டிநாட்டில் தங்கி இருந்த பெருமைக்குரிய இடம் ஆகும்.

இத்தகைய பக்திச் சிறப்பு மிக்க மதுரை ஆதீனத்தின் 291 ஆவது முதல்வரின் ஆசியுடன் 1966 இல் யாழ்ப்பாணத்தில் எமது குருநாதரால் சைவ ஆதீனம் நிறுவப்பட்டது.

அதன்போது ஆதீன முதல்வராக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் தனது குருநாதராகிய ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளது பெயரையே எமது குருநாதருக்குச் சூட்டி நல்லை ஆதீனத்தை நிறுவ உத்தரவளித்தார்.

மதுரை ஆதீன முதல்வர் சைவத்துக்காகவும் தமிழுக்காகவும் தொண்டு செய்த பெருந்தகை. சமய நல்லிணக்கம் குறித்து மிகவும் ஆர்வம் கொண்டிருந்ததோடு இலங்கை வாழ் சைவ மக்கள் குறித்தும் அதிக கரிசனை கொண்டு செயற்பட்டார். எம்முடன் பேரன்பு கொண்டிருந்தார். எமது நல்லை ஆதீனச் செயற்பாடுகளுக்கு உறுதுணையாக விளங்கினார்.

# இல்ல மாணவர்களின் பாதுகாப்பை முகாமையாளர்கள் உறுதி செய்யவேண்டும்

## அம்பாறை மேலதிக அரச அதிபர்





(வி.ரி.சகாதேவராஜா)

இன்று இக்கட்டான காலகட்டத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். இல்லத்தினுள் வெளியார் வருவதை கண்காணிக்கவேண்டும். இல்ல மாணவர்களின் பாதுகாப்பை இல்ல முகாமையாளர்கள் உறுதிசெய்யவேண்டும்.

இவ்வாறு அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் காரைதீவில் ஒருதொகுதி உலருணவுப்பொருட்களை பொருட்களை வழங்கிவைத்துரையாற்றுகையில் தெரிவித்தார்.

சர்வோதய நிதியுதவியில் அம்பாறை மாவட்ட சிவில்சமுகஅமைப்புகளின்சம்மேளனம் மாவட்டத்தில் 0%சிறுவர்சிறுமியர் இல்லங்களுக்கு உலருணவுப்பொதித் தொகுதிகளை வழங்கிவருகிறது.

அந்தவகையில் வீரமுனை சீர்பாததேவி சிறுவர் இல்லம், கல்முனை மெதடிஸ்த சிறுமியர் இல்லம், அக்கரைப்பற்று விபுலாநந்த சிறுவர் இல்லம் ஆகிய 3 இல்லங்களுக்கு ஒரு தொகுதி உலருணவுப் பொதிகளை வழங்கிவைக்கும் நிகழ்வு சிவில்சமுக சம்மேளன மாவட்ட இணைப்பாளர் வ.பரமசிங்கத்தின் ஏற்பாட்டில் நேற்று(16) திங்கட்கிழமை காரைதீவு பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

நிகழ்வில் காரைதீவு பிரதேசசெயலாளர் சிவ.ஜெகராஜன் உதவிபிரதேசசெயலாளர் எஸ்.பார்த்தீபன் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை இணைப்பாளர் எ.எல்.அஸார்தீன் இல்லபொறுப்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

யுஎஸ்எயிட் ஸ்தாபனத்தின் நேரடி பங்குதாரர்களான மனித எழுச்சி நிறுவனம் மற்றும் பாதிக்கப்பட்ட பெண்கள் அரங்கம் சார்பில் இப்பொருட்கள் கையளிக்கப்பட்டன.

அங்கு மேலதிக அரசஅதிபர் மேலும் பேசுகையில்:

பேரிடர்கள் அனர்த்தங்களை எதிர்கொள்வதென்பது கஸ்டம்தான். எனினும் அத்தகைய இக்கட்டான காலங்களில் அவை மக்களுக்கு நல்ல படிப்பினைகளை ஏற்படுத்தவும் தவறவில்லை. அவை ஏனையோருக்கு உதவும் நல்ல மனிதபண்புகளை ஏற்படுத்தியுள்ளன.

சுனாமி மற்றும் சமகால கொரோனா அனர்த்தங்கள் எமக்கு பல படிப்பினைகளை கற்றுத்தந்துள்ளன.நல்லபழக்கவழங்கங்களுடன் கூடிய மற்றவர்களுக்கு உதவிசெய்யக்கூடிய வாழ்க்கைக்கோலங்களை மாற்றித்தந்துள்ளன. இப்படிப்பட்ட காலங்களில் கஸ்டங்களைபகிர்ந்துகொண்டு இஇனமதபேதமற்று நாம்உதவிசெய்யவேண்டும்.

கடந்தமாதம் ஏழு இல்லங்களுக்கு சுகாதாரபொருட்களை வழங்கியிருக்கிறோம்.

இடர்காலங்களில் உதவிசெய்வதற்கு பாக்கியம் செய்திருக்கவேண்டும் .அது அனைவருக்கும் கிடைப்பதில்லை. உதவிசெய்ய அப்படிப்பட்ட வாய்ப்பு கிட்டியிருப்தும் இறைவனின் அருளே எனலாம். எமது சமுகஆர்வலர் சகா கொரோனாக்காலங்களில் பல லட்சருபா பெறுமதியான உலருணவுகளை வழங்கிய அனுபவம் உண்டு. தமது இன்னுயிரையும் துச்சமென மதித்து இத்தகைய உதவிகளை செய்யும்போது இறைவனை நெருங்குகின்றோம்.

வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் . கொரோனா 3வது அலை இன்று தாண்டவமாடுகின்றது. தடுப்பூசி ஏற்றிக்கொண்டாலும் சுகாதார நடைமுறைகளை நாம் கட்டாயம் பின்பற்றிக் கொள்ளவேண்டும்.

சிறுமியர் இல்லத்தை நடாத்துவதென்பது எளிதான காரியமல்ல. பல விமர்சனங்களைத்தாண்டி நடாத்தவேண்டிய நிலை. விரைவிலே கொரொனா என்கின்ற ஆட்கொல்லி நோயிலிருந்து விடுபடவேண்டும். அதற்கு நாம் ஒவ்வொருவரும் அவதானமாக சுகாதாரத்துறையினருக்கு ஒத்துழைக்கவேண்டும் என்றார்.

காரைதீவு பிரதேசசெயலாளர் சிவ.ஜெகராஜன் பேசுகையில்: இன்று இல்லங்களுக்கான உதவிகள் என்பன குறைந்துவிட்டது. வெளிநாடு அல்லது அரசசார்பற்றநிறுவனங்களின் உதவிகளும் குறைந்துவிட்டன. அத்தகைய காலகட்டத்தில் வழங்கப்படும் உலருணவு என்பது வரப்பிரசாதமாகும். காலத்தினாற்செய்த உதவி பெரிதும் பாராட்டப்படவேண்டியது என்றார்.

இணைப்பாளர் வ.பரமசிங்கம் நன்றியுரையாற்றினார்

# பொதுச்சபைக் கூட்டமும் புதிய நிர்வாகத் தேரிவும்





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

காத்தான்குடி பள்ளிவாயல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தின் 2021/2022ஆம் ஆண்டுக்கான பொதுச்சபைக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் ஞாயிற்றுக்கிழமை காலை 07:30 மணிக்கு சம்மேளன கூட்ட மண்டபத்தில் இடம் பெற்றது.

நாட்டிலும் குறிப்பாக எமது மாவட்டத்திலும் அதி வீரியத்துடன் பரவி வரும் கொவிட் 19 டெல்டா திரிபுடன் கூடிய வைரஸ் பெருந்தொற்றின் காரணமாக குறித்த கூட்டத்தினை நடாத்துவதற்காக வேண்டி சுகாதாரத் தரப்பினர் மற்றும் பாதுகாப்புத் தரப்பினரின் வேண்டுகோளுக்கமைவாக கூட்ட பங்குபற்றுனரின் அதிக பட்ச எண்ணிக்கை 25 ஆக மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

இதன் காரணமாக சம்மேளன பதவி நிலை உறுப்பினர்களின் பங்குபற்றுதலோடும் ஏனைய பொதுச்சபை உறுப்பினர்களின் Zoom தொழில்நுட்ப இணைப்பினூடான பங்குபற்றுதலோடும் இடம் பெற்றது.

இதன்போது 2021/2022ஆம் புதிய நிர்வாக ஆண்டுக்காக தெரிவுசெய்யப்பட்ட பதவி தாங்குனர்கள் தொடர்பான விபரம் பின்வருமாறு.

1. தலைவர் மௌலவி MI. ஆதம் லெவ்வை பாலாஹி B.com (காத்தான்குடி 1 மீரா பெரிய ஜும்ஆ பள்ளிவாயல் சார்பாக)

2. செயலாளர் அஷ்ஷெய்க். SMK முஹம்மத் (ஜாபிர்) நளீமி BA LLB (காத்தான்குடி ஜம்மியத்துல் உலமா சார்பாக)

3. பொருளாளர் ஜனாப். AC. சபுவான் BBA (புதிய காத்தான்குடி 1 பதுறியா ஜும்ஆப் பள்ளிவாயல் சார்பாக)

4. ஆயுட்கால பிரதித் தலைவர் அல்ஹாஜ் AL. அப்துல் ஜவாத் BA. LLB

**உப தலைவர்கள்.**

5. அல்ஹாஜ். AM-M. றவூப் ஒக. (முஹ்யித்தீன் மெத்தைப் பெரிய ஜும்ஆப் பள்ளிவாயல் காத்தான்குடி 3 சார்பாக)

6.அல்ஹாஜ் SH-M. அன்ஸார் (நூறாணியா ஜும்மா பள்ளிவாயல் புதிய காத்தான்குடி 6 சார்பாக)

7. அல்ஹாஜ் KLM. பரீட் ஒக. (பெரிய ஜும்ஆ பள்ளிவாயல், புதிய காத்தான் குடி 3 சார்பாக)

8.ஜனாப். UM. அஸ்லம் குஃஅகு (மினன் ஜும்ஆப் பள்ளிவாயல் காங்கேயனோடை) (மண்முனைப்பற்று பள்ளிவாயல்கள் சார்பாக)

9.ஜனாப் YL. ஹபீப் லெப்பை (முஹைதீன் ஜும்ஆ பள்ளிவாயல், மஞ்சந்தொடுவாய்) (மண்முனை வடக்கு பள்ளிவாயல்கள் சார்பாக)

10. உப பொருளாளர் அல்ஹாஜ். MIA . பஷீர் B.com (ஜாமிஉழ்ழாபிரீன் பெரிய மீரா ஜும்ஆ பள்ளிவாயல் சார்பாக)

தற்போதைய சூழ்நிலையில் பின்வரும் பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கான தெரிவு இடம் பெறாததன் காரணமாக கடந்த 2020/2021 ஆம் ஆண்டு நிர்வாக காலப்பகுதியில் தெரிவு செய்யப்பட்டவர்கள் குறித்த தெரிவு நடைபெறும் காலப்பகுதி வரை பதவி தாங்குனர்களாக செயற்படுவர் எனவும் தீர்மானிக்கப்பட்டது. அந்தவகையில்,

**உப செயலாளர்**

11. ஜனாப். A. J. அனீஸ் அஹ்மத் ஒக உள்ளக கணக்காய்வாளர்கள்.

12. அல்ஹாஜ் KM. கலீல் ஒக (பிலால் எம்போரியம்)

13. மௌலவி அல்ஹாபிழ். S.H.M. ரமீஸ் ஜமாலி BA

14. ஜனாப் K.M.M. ஜெனிஸர் BSc

15. வெளியக க ணக்காய்வாளர் ஜனாப் J.M. பிஸ்ருல் ஹாபி BSc




# அலி ஸாஹிர் மௌலானா முயற்சியில் ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் கோவிட் விடுதி



(ந.குகதர்சன்)

கொரோனா தொற்று இலங்கையில் ஏற்பட்டு நாடும் மக்களும் பல்வேறு சவால்களை எதிர்கொண்ட தருணங்களில் அரசியலுக்கு அப்பாலான அலி ஸாஹிர் மௌலானா பங்களிப்பானது மிகவும் பெறுமதியானது..

ஜனாசா எரிப்பிற்கு எதிரான போராட்டம், முதலாவது அலையில் ஊரடங்கு காரணமாக பல்வேறு இடங்களிலும் முடக்கப்பட்ட மக்களை அவர்களது சொந்த பகுதிகளுக்கு அனுப்பி வைத்தது, வைத்தியசாலைக்கான இலவச போக்குவரத்து சேவை, ஊரடங்கினால் பாதிக்கப்பட்டவர்களுக்கான , நிர்க்கதியாக மேல் மாகாணத்தில் முடங்கிய கிழக்கை சேர்ந்தவர்களுக்கான உணவு பொதி விநியோகம், ஜனாசா எரிப்புக்கு எதிரான ஊடக விழிப்புணர்வினை உலகம் பூராக எதிரொலிக்க செய்தமை, என பலவாறாக தொடர்ந்து இறுதியாக ஏறாவூர் பிரதேச மக்களது நலன்கருதி ஏறாவூர் ஆதாரவைத்தியசாலையில் சிகிச்சை நிலையம் ஒன்றினை அமைப்பதன் அவசியம் குறித்து கவனம் செலுத்தி தனது முயற்சியின் ஊடாக நிதியினை ஒழுங்கமைத்து 20 கொவிட் நோயாளிகளுக்கு முழு வசதிகளை கொண்டதான சிகிச்சை நிலையம் ஒன்றினை அமைத்து கொடுத்ததுடன் , அவசர சிகிச்சை பிரிவினை தற்காலிகமாக வைத்தியசாலையின் பிரிதொரு இடத்தில் இயங்கச் செய்வதற்கான ஏற்பாடுகளையும் வழங்கி உள்ளார்.

எவ்வித அரசியல் அதிகாரங்களும் அற்ற நிலையில் மக்களுக்கான அவசியமான பணி குறித்தும் சமூக நலன் குறித்தும் முனைப்புடன்செயலாற்றியமைக்காக பலரும் அலி ஸாஹிர் மௌலானா அவர்களை பாராட்டி வருகின்னறனர்.


இந்நிலையில் ஏறாவூர் வைத்தியசாலையில் அலி ஸாஹிர் மௌலானா அவர்களது ஒழுங்கமைப்புடன் அமைக்கப்பட்ட கொவிட் விடுதி மற்றும் அவசர சிகிச்சை பிரிவு என்பவற்றை உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர்தயாளினி சசிகுமார்தலைமையில் இடம்பெற்றது.

இதில் ஏறாவூர் நகர முதல்வர் நழீம் , பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நா. மயூரன், கிழக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சரும் ஏறாவூர் நகர சபை உறுப்பினருமான சுபையிர் ஹாஜி , ஏறாவூர்நகரசபை உறுப்பினர்களான யாழ் (லூலூ), மற்றும் ஜப்பார் , சமூக ஆர்வலர்கள், வைத்தியசாலை வைத்தியர்கள் ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

குறித்த விடுதியில் நாளை முதல் கொவிட் நோயாளர்கள் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை வழங்கப்பட உள்ளதுடன் முதற் கட்டமாக பெண்களை அனுமதிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சமகாலத்தில் மிகவும் அவசியமானதும் பிரதேசத்தின் தேவையறிந்து ஒரு ஒழுங்கமைப்பினை முன்னெடுத்தமைக்காக அலி ஸாஹிர் மௌலானா அவர்களுக்கு பலரும் தமது நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# நிந்தவூர் மதீனா விளையாட்டு கழகத்தில் இருந்து மூவர் இலங்கை தேசிய கபடி அணிக்கு தேரிவு





(யாக்கூப் பஹாத்)

சீனாவில் அடுத்த வருடம் இடம்பெற உள்ள 19வது ஆசிய விளையாட்டு விழாவுக்கான இலங்கை தேசிய கபடி அணிக்கான தெரிவு போட்டிகள் கடந்த 2021.08.14 ம் திகதி கொழும்பில் விளையாட்டு அமைச்சின் உள்ளக அரங்கில் இடம்பெற்றது

இதில் மதீனா விளையாட்டு கழகத்தில் இருந்து மூவர் இக்குழாமிற்கு Aslam Saja , Mohamed Haalish Aflal Aflal ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.

# மன்னார் உதவி தேர்தல்கள் ஆணையாளர் ஜே.ஜெனிற்றன் வவுனியாவுக்கு இடமாற்றம்



(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மாவட்டத்தின் உதவி தேர்தல்கள் ஆணையாளராகவும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலகராகவும் கடந்த இரண்டரை வருடங்களாக கடமைபுரிந்து வந்த ஜே.ஜெனிற்றன் இடமாற்றம் பெற்றுச் செல்லுகின்றார்.

மன்னார் மாவட்டத்தின் உதவி தேர்தல்கள் ஆணையாளராகவும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலகராகவும் கடந்த இரண்டரை வருடங்களாக கடமைபுரிந்து வந்த ஜே.ஜெனிற்றன் இரண்டு பொதுத் தேர்தல்களையும் மூன்று வாக்கெடுப்பு மீளாய்வுகளையும்,

அத்துடன் இவர் வாக்காளர்களின் நலன்கருதி வாக்கெடுப்பு மாவட்டங்களை அவ் மக்களின் தேவைகளுக்கேற்ப 98 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

இவரின் காலத்தில் தேர்தல்கள் வேளையில் அசம்பாவிதங்கள் எதுவும் நடைபெறாதிருக்கும் முகமாக தன்னை முழுதாக அர்ப்பணித்து செயல்பட்டு வந்ததை பலரும் பாராட்டியதும் இங்கு குறிப்பிடத்தக்து.

இவர் திருகோணமலையில் உதவி தேர்தல் ஆணையாளராக கடமை புரிந்து கொண்டிருந்த வேளையிலேயே மன்னாருக்கு இடமாற்றம் பெற்று வந்தார்.

இவர் தற்பொழுது மன்னார் உதவி தேர்தல் ஆணையாளராக இருந்து திங்கள் கிழமை (16.08.2021) மன்னாரிலிருந்து வவுனியா உதவி தேர்தல் ஆணையாளராக இடமாற்றம் பெற்று செல்லுகின்றார் என்பதும் குறிப்பிடத்க்கது.

## மன்னாருக்கு புதிய உதவி தேர்தல்கள் ஆணையாளராக கே.விமலரூபன் பதவியேற்பு



(வாஸ் கூஞ்ஞ)

மன்னார்மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளராகவும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலகராகவும் கே.விமலரூபன் இடமாற்றம் பெற்று வந்துள்ளார்.

மன்னார்மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளராகவும் உதவித் தெரிவத்தாட்சி அலுவலகராகவும கடமை புரிந்து வந்த ஜே.ஜெனிற்றன் வவனியாவுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றதைத் தொடர்ந்து இவரின் இடத்துக்கு மன்னார் மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளராக கே.விமலரூபன் இடமாற்றம் பெற்று வந்துள்ளார்.

திங்கள் கிழமை (16.08.2021) முதல் தனது பதவியை பொறுப்பேற்றுள்ள கே.விமலரூபன் இவர் ஹெப்பற்றிக்கொல்லாவில் உதவி பிரதேச செயலாளராக கடமைபுரிந்து கொண்டிருந்த வேளையில் தற்பொழுது மன்னார் மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளராக பொறுப்பேற்றுக் கொண்டார்.

பேராதனை பல்கலைக்கழக கலைமானி பட்டதாரியான இவர் ஐந்து வருடகால அரச சேவை அனுபவங்களை கொண்டவராவருமாவார். என்பதும் குறிப்பிடத்தக்கது.

